©
GOVERNMENT OF TAMIL NADU
2026

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 48] CHENNAI, TUESDAY, FEBRUARY 3, 2026
Thai 20, Visuvaavasu, Thiruvalluvar Aandu–2057

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

COLLECTORS AND LOCAL AUTHORITIES

**செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவரின் அறிவிக்கை**

**செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், எடையூர் ஊராட்சியின் ஊராட்சி மன்ற துணைத் தலைவரை 1994-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 206இன்கீழ், பிரிவு 205(11)இன்படி பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை**

*(ந.க.எண்.1854/2024/அ5–உ.இ(ஊ).செ.வ–6)*

**No. VI(2)/3(b)/2026.**

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், எடையூர் ஊராட்சியின் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திருமதி.வெ.ராஜாத்தி, என்பவர் ஊராட்சி நிர்வாகத்தில், ஊராட்சி சட்ட விதிகள் மற்றும் வழிகாட்டுதல்களை மீறி ஊராட்சி நிதியிலிருந்து ஊராட்சி மன்றத் தலைவருடன் இணைந்து செலவினம் மேற்கொண்டுள்ளது கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, இவரின் மீது 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 206இன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, உரிய நடைமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்ட பின்னர், இவரின் மீதான குற்றச்சாட்டுகள், அதற்கான விளக்கங்கள், எடையூர் ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள், பெறப்பட்ட கூடுதல் விளக்கங்கள், நேரடி விசாரணையின் போது தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் ஆகியனவற்றை உரிய ஆவணங்களுடன் தன்னிச்சையாகவும், ஆழ்ந்தும் பரிசீலனை செய்ததில், இவர் ஊராட்சி சட்ட விதிகள் மற்றும் அரசு வழிகாட்டுதல்களை மீறி செயல்பட்டுள்ளதும், முறையாக ஆவணங்கள் எதுவும் இல்லாமல் தன்னிச்சையாக ஊராட்சி நிதியிலிருந்து முறைகேடான செலவினங்கள் மேற்கொள்ள ஊராட்சி மன்றத்தலைவருக்கு உடந்தையாக செயல்பட்டு, ஊராட்சியின் துணைத் தலைவருக்கான கடமையிலிருந்து தவறியுள்ளது நிருபணமாவதாக எனது உளத் தேர்வின்படி தீர்மானித்து, 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 206இன் கீழ், சட்டப் பிரிவு 205(11)இன்படி ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, இவரை எடையூர் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழ்*** சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்படும் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

செங்கல்பட்டு,
2026 ஜனவரி 22.

**தி. சினேகா,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித்தலைவர்.*

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU

VI-2 Ex. (48)